IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

RTROP.No.14/2023

CW–1 is solemnly affirmed on 10.06.2026 in accordance with the provisions of the Oaths Act No.44 of 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபு | Caste | : |
| S/o. | : லேட்.கோபால் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

<u>முதல் விசாரணை;</u>

நான் மனுவில் கோருநர். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 23.08.2021 நிலம் கையகபடுத்துதல் அலுவலர் (LAO) வழங்கிய இழப்பீட்டு உத்தரவு (Award No.77/2020)– அசல்– Ex.C1
2. புலஎண்.71/B இல் அமைந்துள்ள கையப்படுத்தப்பட்ட சொத்தின் வழிகாட்டி மதிப்பு (Guideline Value)–இணைய நகல் (Online copy)– Ex.C2
3. கே.ராஜா அவர்கள் உமாமகேஸ்வரி அவர்களின் பெயரில் ஏற்படுத்திய கிரயப்பத்திரம் (Sale Deed) –இணைய நகல் (Online copy)– Ex.C3

4. மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை – நகல் –Ex.C4

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு ஆர்ஜிதம் செய்த நிலம் தவிர வேறு நிலங்கள் எதுவும் கிடையாது. நான் ஹோட்டல் கடை வைத்திருக்கிறேன். எனது தொழில் விவசாயம் கிடையாது. எனக்கு நில ஆர்ஜிதம் தொடர்பாக அறிவிப்பு 16.6.2020ல் கிடைத்தது என்றால் சரிதான். அது சம்பந்தமான விளம்பரம் செய்தித்தாளில் வந்தது என்றால் சரிதான். அவ்வாறு விளம்பரம் கிடைத்தவுடன் நேரில் நிலம் தொடர்பான உரிமையாளர்களை அழைத்து நிலம் தொடர்பான ஆவணங்கள் கொடுத்தால் நிலம் சம்பந்தப்பட்ட விலை நிர்ணயம் செய்ய முடியும் என தெரிவித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நடத்தப்பட்ட விசாரணையில் நான் ஆஜராகி நிலம் தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் ஆதார் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட மூன்று வருட காலத்திற்கான கிரைய ஆவணங்களை கணக்கில் எடுத்து அதில் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ள கிரைய தொகைகளை வைத்துதான் இந்த நிலம் நிலம் தொடர்பான விலை நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கையகப்படுத்தப்பட்ட அரை சென்ட் போக மீதி உள்ள இரண்டரை சென்டு நிலம் என் கைவசம் உள்ளது. அதில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நிலம் ஆர்ஜிதம் செய்த இடத்தில் கடை மற்றும் வீடு இருந்தது. அந்த கடை பகுதிதான் நிலம் ஆர்ஜிதம் மேற்கொள்ளப்பட்டது. அதுபோக மீது இடத்தில் நான் தற்பொழுது வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். எனது நிலத்தில் பாதி இடம் கடையும் ரோட்டில் கொஞ்சம்

நீட்டி ஷாப் போட்டு நான் கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அந்தப் பகுதியை நான் ஆக்கிரப்பு செய்து கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். தற்பொழுது நான் எனது வீட்டு பகுதியில் கடை நடத்தவில்லை. ஆர்ஜிதத்திற்கு முன்பு கடை வைத்திருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்த நிலம் எனது தந்தை பெயரில் உள்ளது என் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு நான் ஒரே பையன் மற்றும் ஒரு மகள் உள்ளார். எனது அப்பா கிரயம் வாங்கிய சொத்தின் பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் என்ன விலைக்கு எனது தந்தை கிரயம் வாங்கினார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழிகாட்டு மதிப்பீடு மற்றும் விலை நிர்ணயம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட கிரைய பத்திரம் ஆகிய அனைத்தும் ஆர்ஜிதத்திற்கு பின்னர் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியில்ல. மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் அவார்டு உத்தரவிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டவை என்றும் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ஆர்ஜித நிலத்தின் மதிப்பை காட்டக்கூடிய ஆவணமும் அந்தப் பகுதி வணிக ரீதியாக பயன்படுத்தப்படக்கூடிய நிலம் என்பதை காட்டக் கூடிய ஆவணமோ நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே எனக்கு அதிக இழப்பீடு கோருவதற்கு முகாந்திரம் எதுவும் கிடையாது என்றும் முறையான விசாரணையின் பேரிலேயே ஆர்ஜித நிலத்தின் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. கடையின் முன் பகுதி மற்றும்

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் இருந்த செப்டிக் டேங்க் மற்றும் தண்ணீர் தொட்டி ஆகியவற்றுக்கான இழப்பீடு தொகையும் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதன் மதிப்பீடை அதிகப்படுத்தி காட்டக்கூடிய கணக்கீடு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதிகப்படியான இழப்பீடு தொகை வழங்க வேண்டி எனது தரப்பில் எவ்வித ஆவணம் தாக்கல் செய்யாத பட்சத்தில் அது சம்பந்தமாக எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரனை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.10 19:18:22 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சேலம்